| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>திருமதி.பாத்திமாபேகம்<br>க/பெ.திரு.அப்பாஸ் | அ.வ.எண். 246/2014 | 23.06.2026 |

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) இவ்வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு விவரம் சொல்லியது யார் என்றால் நான் தான். வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது மாமனார் அப்துல்குப்துஸ்க்கு பாத்தியப்பட்டது. எனது மாமனாருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் கிரையம் வாங்கியதாக சொன்னார்கள். வழக்கு சொத்துக்கள் எந்தந்த புல எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் புல எண் தெரியாது, ஆனால் 8 ஏக்கர் 10 சென்ட் விஸ்தீரணம்.

2) எனது மாமனார் அப்துல்குப்துஸ் பெயருக்கு ஏற்பட்ட வழக்கு சொத்திற்கான வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் மேற்படி ஆவணங்கள் எனது மாமியாரிடம் உள்ளது. எனது மாமியார் தான் இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். எனது மாமனார் அப்துல்குப்துஸ் எப்போது இறந்தார் என்றால் எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பே, எனது கணவர் 10ம் வகுப்பு படிக்கும் போது இறந்துவிட்டதாக சொன்னார்கள்.

3) எனது மாமனாருக்கு எனது மாமியார், எனது கணவரும், 1ம் பிரதிவாதி ஒரு நாத்தனாரும் இன்னும் 3 நாத்தனார்களும் வாரிசுகள் என்றால் சரிதான். எனது மாமனாரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யாததற்கு காரணம் உள்ளதா என்றால் இல்லை. அதுபோல 1ம் பிரதிவாதியை தவிர, இதர 3 நாத்தனார்களை இவ்வழக்கில் கட்சி சேர்க்காததற்கு காரணம் உள்ளதா என்றால் இல்லை.

4) எனது மாமனார் காலமான பிறகு குடும்ப சொத்துக்களை பொறுத்து 28.07.2011ல் எனது மாமியாரான 2ம் பிரதிவாதி பெயருக்கு எனது கணவரும் அவரது சகோதரிகளும் வா.சா.ஆ.1 பாக பாத்திய விடுதலை ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாக பாத்திய விடுதலை ஆவணத்தின் அடிப்படையில் சொத்து முழுவதும் 2ம் பிரதிவாதிக்கு சொந்தமாகிவிட்டது என்றால் சரிதான்.

5) எனது மாமியாரான 2ம் பிரதிவாதி எனது நாத்தனார்களுக்கு தான செட்டில்மென்ட் ஆவணங்கள் மூலம் தனித்தனியாக சொத்துக்கள் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த தான செட்டில்மென்ட் ஆவணத்தை தவிர, மற்ற தான செட்டில்மென்ட் ஆவணங்களை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6) எனது மாமியாரான 2ம் பிரதிவாதி, அவரது மகளான 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மென்ட் ஆவணம் வா.சா.ஆ.3 ல் கண்ட சொத்து மனை பிரிவுகள் என்றால் சரிதான், ஆனால் அதற்கு அங்கீகாரம் கிடைக்காததால் அதில் நான் தற்போது விவசாயம் செய்கிறேன். வழக்கு சொத்தில் நான் வா.சா.ஆ.4 ஹிபா ஆவணத்தின் அடிப்படையில் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஹிபா ஆவணத்தில் கண்ட சொத்துகளின் அரசு மதிப்பு என்ன என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

7) மேற்படி வா.சா.ஆ.4 ஹிபா ஆவணம் பதிவு செய்யப்படாததால் ஏற்று கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஹிபா ஆவணம் எப்போது எழுதப்பட்டது என்றால் 06.03.2012 ல் வாய்மொழியாக கொடுத்தார், பின்னர் 11.04.2012 ல் அதனை உறுதி செய்து வா.சா.ஆ.4 ஹிபா ஆவணத்தை எழுதி கொடுத்தார். வா.சா.ஆ.4 நடைமுறைக்கு வரவில்லை என்றாலும், எனவே நான் மேற்படி ஆவணம் மூலம் வழக்கு சொத்துக்களில் எவ்வித உரிமையும் கோர முடியாது என்றாலும் சரியல்ல. இவ்வழக்கின் நான் கோரும் பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.